தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 29, திருவள்ளுவர் ஆண்டு–2053

2022 ஏப்ரல் 12, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு."

வாக்கில் இனிமையும், பிறர்க்கு வழங்கிக் காத்திடும் தன்மையும் கொண்டவர்க்கு இவ்வையகமே வசப்படும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.R. *இராஜா, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

***89—திரு. S.R. இராஜா:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, கடப்பேரி கிராம நிருவாக அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் அமைக்க, தாம்பரம் வட்டம், தாம்பரம் நகரம், வார்டு A, பிளாக் எண் 7, நில அளவை எண் 5/21, பரப்பு 3,950 ச.மீ., சுமார் 97 செண்ட், களம் புறம்போக்கு வகைப்பாடு நிலத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. முழுமையான கருத்துரு பெறப்பட்டவுடன், அரசளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.

திரு. S.R. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் கேட்ட கேள்விக்கு கட்டடம் கட்டித் தரப்படும் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். கடப்பேரி மட்டுமல்லாமல், சிட்லபாக்கம் மற்றும் மாடம்பாக்கம் ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் R.I. Quarters இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அதையும் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அதேபோல, சிட்லபாக்கம், மாடம்பாக்கம் ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் R.I. அலுவலகத்திற்கு கட்டடம் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, அதையும் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஏற்கெனவே இருக்கின்ற R.I. அலுவலகங்கள், VAO அலுவலகங்கள் உள்ளிட்ட பல அலுவலகங்கள் தற்போது பழைய கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தாம்பரம் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் சில இடங்களில் அதுபோன்ற நிலை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தக் கட்டடங்களையும் பராமரித்து கட்டிக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்லபாக்கம் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மாடம்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஆகிய அலுவலகங்களுக்கு நிலம் ஒப்படைக்கப்பட்டு, கட்டடம் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற* RDO, R.I. *அலுவலகங்கள், தாலுகா அலுவலகங்கள் மற்றும்* VAO *அலுவலகங்கள் ஆகியவற்றின் கட்டடங்கள் மிகவும் பழமையாக இருக்கின்றன. அவற்றிற்குப் பதிலாக புதியதாக கட்டடம் கட்டித் தருவார்களா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நாங்கள் அதைக் கொண்டு சென்றிருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.R. *இராஜா அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு தகவலை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதை நான் என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். தாம்பரம் தற்போது மாநகராட்சியாகத் தரமுயர்த்தப்பட்டிருந்தாலும், தாம்பரத்தில், பூர்வீகமாக பழைய தாம்பரம் என்ற ஒரு கிராமம் இருக்கின்றது. அதேபோல, சேலையூர், கடப்பேரி போன்று தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் எங்கெல்லாம் அரசு நிலங்கள் இருக்கின்றனவோ, குறிப்பாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தாம்பரம் தற்போது மாநகராட்சி.*

திரு. S.R. இராஜா: *ஆம். தாம்பரம் மாநகராட்சி. இருந்தாலும், தாம்பரத்தில்* old Tambaram *என்ற ஊர் இன்றைக்கும் இருக்கிறது. அதுமட்டுமல்ல, தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு நிலங்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீண்டும் சொல்கிறேன். தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் என்று சொல்லுங்கள்.*

[2022 ஏப்ரல் 12

திரு. S.R. இராஜா: அதை நான் மீண்டும் நகராட்சி என்று சொல்வதற்குக் காரணம், தாம்பரத்தில் இருக்கின்ற அரசு நிலங்கள், அது endowment–க்கு சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி, அரசுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி, அத்தனை நிலங்களும் இதுவரை தாம்பரத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்னொரு முக்கியமான விஷயம், இன்றைக்கு நகரப் பகுதியில் அரசு நிலங்கள் கிடைப்பது மிக மிகக் கடினமாக இருக்கின்றன. இன்றைக்கு பல பேர் forgery ஆக documents–ஐத் தயாரித்து, பட்டாக்களைத் தயாரித்து, அரசு நிலங்களை வைத்திருக்கின்றார்கள். அதற்காக, புதிதாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, அரசாணை எண் 64–ஐ வெளியிட்டிருக்கிறது. அந்த உத்தரவின் மூலமாக, தற்போது எங்கெல்லாம் அரசு நிலங்கள் இருக்கின்றனவோ அவை மீட்டெடுக்கப்படும். தற்போது ரேஷன் கடைகள் கட்டுவதற்கு, நகராட்சி அலுவலகம் கட்டுவதற்கு, EB அலுவலகம் கட்டுவதற்கு, குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கெல்லாம் இடம் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இதுபோன்று இடம் தேவைப்படுகிற நேரத்தில் எல்லாம் நாம் இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அரசு இடங்கள் நிறைய இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சத்தியபாமா கல்லூரி நிர்வாகத்தின் ஆக்கிரமிப்பில் இருந்த 90 ஏக்கர் இடம் குறித்து இதே சட்டமன்றத்தில் பேசப்பட்டுதான். . .

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். என்ன வேண்டுமென்ற கேள்விக்கு வந்துவிடுங்கள்.

திரு. S.R. இராஜா: அந்த நிலம் மீட்டெடுக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல் இன்றைக்கு எங்கெல்லாம் அரசு நிலங்கள் இருக்கின்றனவோ, பல தனியார் கல்லூரிகள் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றார்கள். Forgery பட்டாக்களை வைத்து நிலங்களை அபகரித்து வைத்திருக்கின்றார்கள். அந்த இடங்களை மீட்டெடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றியிருக்கிற 4 மாவட்டங்களில் இதேபோல forgery பட்டாக்கள், சம்பந்தமில்லாத பத்திரங்களெல்லாம் இருக்கின்றன. எந்தெந்த இடங்கள் நீண்ட நெடிய காலமாக ஆக்கிரமிப்பில் இருக்கின்றனவென்று, பல வருடங்களாக உறுப்பினராக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். உதாரணமாக, ஜேப்பியார் கல்லூரி ஆக்கிரமிப்பில் இருக்கிறதென்று சொன்னவுடன் ஆக்கிரமிப்பில் இருந்த அந்த 92 ஏக்கர் நிலத்தை மீட்டெடுத்து, உடனடியாக அரசாங்கத்தின் உபயோகத்திற்கு ஒதுக்கப் போகிறோம். எந்தெந்த துறைகளுக்கு வேண்டுமென்பதையெல்லாம் கேட்டிருக்கிறோம். அதை அந்தந்தத் துறைகளுக்கு நாங்கள் ஒதுக்கிக் கொடுக்கப் போகிறோம். அதேபோல் வேறு இடங்கள், பெரிய இடங்களாக, முழுமையாக இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அரசு உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கும். சிறிய சிறிய இடங்களெல்லாம் ஆக்கிரமிப்பில் இருக்குமென்று சொன்னால், அந்த இடங்களில் அரசாங்கக் கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவைப்படுகிற நேரத்தில் நிச்சயமாக அவற்றைக் காலி செய்து அவற்றில் அரசுக் கட்டடங்கள் கட்டப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பனபாளையம் தாலுகா புதியதாக அறிவிக்கப்பட்டு, அதற்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டு கட்டடம் கட்டிக்கொண்டிருக்கிற காலக்கட்டத்தில், அது ஆற்றுக்கு அருகில் இருக்கின்ற காரணத்தினால், போதிய நிதி இல்லாமல் கடந்த ஓராண்டுக் காலமாக அந்தப் பணிகள் நிற்கின்றன. அதற்குப் போதிய நிதி வேண்டுமென்று அரசுக்கு கோப்புகள் வரப்பெற்றிருக்கின்றன. ஆனால், ஓராண்டுக் காலமாக நிதி ஒதுக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் அதற்கு நிதி ஒதுக்கி அந்தக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குத் தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.*

திரு. P.R.G. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை வடக்கு தாலுகா, பரப்பளவிலும், மக்கள்தொகையிலும் பெருகியுள்ளது. இதைப் பிரித்து, பெரியநாயக்கன்பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய தாலுகாவை உருவாக்கித் தர முடியுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், சகோதரர் சொன்னதைப்போல அந்தந்தப் பகுதியிலே வேண்டுமென்று கேட்கிறார்கள். தகுதிக்கேற்றாற்போல அதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, எந்தெந்தப் பகுதியில் செய்யலாம் என்பதையெல்லாம் நிதி நிலைமைக்கேற்றாற்போல அதை நாங்கள் செய்தும் கொடுப்போம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

95—

குடியிருப்புகள்

***1636—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—